**S.C. No.56/2020**

**சாட்சி பெயர்- திருமதி. கஜிதா**

**தேதி- 07.01.2023**

**அ.சா.6 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நானும், கிராம உதவியாளர் திரு. பாபு ஆகியோர் களம்பூர் அண்ணா சாலையிடம் பகல் 1.00 மணிக்கு வந்தோம். அங்கு காவல் ஆய்வாளர் இருந்தார். எதிரியும் அங்கு இருந்தார். எதிரியை காவல் ஆய்வாளர் தான் என்னிடம் அடையாளம் காட்டினார், அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ளார். ஆஜர் எதிரி தான் அவர். ஆஜர் எதிரி தானே முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி சொல்ல சொல்ல போலீசார் அதை எழுதினார்கள். அதில் ஆஜர் எதிரியிடமும், என்னிடமும், கிராம உதவியாளரிடமும் கையொப்பம் பெற்றனர்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் கிராம உதவியாளர் உடையது. எதிரியின் கையொப்பமும் அது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் தன்னுடைய நிலத்தில் உள்ள வேர்க்கடலை செடியில் மறைத்து வைத்திருக்கும் நாட்டு தேக்கு கொம்பினை எடுத்து கொடுப்பதாகச் சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ-5**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

அதன்படி எதிரியின் நிலத்திற்குச் சென்றோம். எதிரி அங்கு மறைத்து வைத்திருந்த தேக்கு கொம்பினை எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் போட்டோம். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ-6** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

எதிரி எடுத்து கொடுத்த கொம்பினை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் உள்ள சிறிய வகையான கொம்பு தான் எதிரி ஒப்படைத்த கொம்பு ( சா.பொ.1). இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் பி.லிட். படித்துள்ளேன். கைப்பற்றுதல் மகசரில் காலம் 5ல் 2வது அயிட்டம் வேறு கையெழுத்தால் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். களம்பூர் காவல் நிலையம் எங்கள் அலுவலகத்திலிருந்து எவ்வளவு தூரம் எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் சுமார் 50 அடி தூரத்தில் கிழக்கு பார்த்து உள்ளது. எங்கள் அலுவலகத்திற்கு எதிரே செல்லும் ரோடு எங்கு செல்கிறது என்றால் ஆலங்குடி - எட்டிவாடி நோக்கி செல்கிறது.

இந்த வழக்குச் சம்மந்தமாக சம்பவம் நடந்த கிராமத்தின் கிராம உதவியாளர் எனக்கு தகவல் சொன்னாரா என்றால் 15-ந் தேதியே தகவல் சொன்னார். கிராம உதவியாளரின் பெயர் என்னவென்றால் பாபு. சம்பவம் நடந்த தகவல் கேட்டு நான் வட்டாட்சியரிடமும், காவல் துறையினருக்கும் எங்களுக்கான விதிமுறைப்படி படி சொன்னேனா என்றால் சொன்னேன். எப்படி சொன்னேன் என்றால் போன் மூலம் சொன்னேன்.

எங்கள் எல்லைக்குட்பட்ட குற்ற வழக்குகளுக்கு காவல் துறையினருக்கு உதவி செய்ய வேண்டும் என்று விதிமுறை உள்ளது என்றால் சரிதான். நான் பணிபுரியும் கிராமத்திலிருந்து என் வசிப்பிடம் 3 கி.மீ. தூரத்தில் இருக்க வேண்டும் என்பதும் உள்து என்றால் சரிதான். நான் கேளூரில் வசிக்கிறேன். சொந்த வீட்டில் வசிக்கிறேன் என்றால் சரிதான். கேளூரிலிருந்து எட்டிவாடி கிராமம் சுமார் 10 கி.மீ. தூரம் என்றால் சரிதான். கிராம உதவியாளர் பாபு என்பவர் எனக்கு 15-ந் தேதி தகவல் சொல்லும் போது நான் கேளூரில் இருந்தேன் என்றால் நான் போளூரில் மருத்துவமனைக்குச் சென்று வந்துக் கொண்டிருந்தேன்.

நான் உடனே சென்று சம்பவ இடத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சென்று பார்க்கும் போது சம்பவ இடத்தில் காவல்அதிகாரிகள் இருந்தனரா என்றால் இருந்தனர். நான் சென்று பார்க்கும் போது என்ன நேரம் என்றால் இரவில் தான் சென்றேன், நேரம் எனக்கு ஞாபகமில்லை. அப்போதே போலீசார் விசாரணைக்கு உதவி செய்ய வேண்டும் என்று கிராம உதவியாளரிடமும் என்னிடமும் கையொப்பம் பெற்றனர் என்றால் அப்போது வாங்கவில்லை.

இந்த வழக்குச் சம்மந்தமாக மறுநாள் விசாரணைக்கு வரவேண்டி காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். சாட்சி தற்போது காவல் நிலையத்திற்கு வர சொல்லவில்லை, அண்ணா சிலைக்கு தான் வர சொன்னார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார். நான் அண்ணா சிலையிடம் சென்ற போது காவல் துறையினரின் ஜீப் எங்கிருந்தது என்றால் அண்ணா சிலைக்கு கீழே நிறுத்தப்பட்டிருந்தது.

காவல் துறையினர் எதிரியை பிடித்து வைத்திருந்ததால் அங்கு பொது மக்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் ஒரு இருபது நபர்கள் இருந்தனர். அண்ணா சிலையைச் சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். அது போக்குவரத்து நிறைந்த பிரதான சாலை என்றால் சரிதான். ஆஜர் எதிரி யாரிடம் சொன்னார், அதை யார் எழுதினார் என்றால் எதிரி காவல் ஆய்வாளரிடம் சொன்னார், அதை காவல் ஆய்வாளர் சொல்ல காவலர் எழுதினார்.

சுமார் 2 மணி நேரம் எழுதினார்களா என்றால் 1 1/2 மணி நேரம் எழுதினார்கள். காவல் ஆய்வாளர் எதிரியிடம் கேள்விகள் கேட்க கேட்க எதிரி பதில் சொல்ல காவல் ஆய்வாளர் காவலருக்குச் சொல்ல எழுதப்பட்டதா என்றால் எதிரி தானாக கொடுத்ததை எழுதினார்கள். அங்கு இருந்த 20 நபர்களிடம் எழுதிய தாள்களில் ஆய்வாளர் கையொப்பம் பெற்றாரா என்றால் கையொப்பம் பெறவில்லை.

அண்ணா சிலையிலிருந்து எட்டிவாடி கிராமம் எவ்வளவு தொலைவில் இருக்கும் என்றால் சுமார் 30 கி.மீ. தூரம் இருக்கும். ஆஜர் எதிரிக்கு சம்பவ இடத்திற்கு அருகில் 3

ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். அதில் 1 1/2 ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலை போடப்பட்டிருந்தது என்றால் குறைவாக போட்டிருக்கலாம், அது பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. வேர்க்கடலை செடிகள் சுமார் 1000 செடிகள் இருக்கும் என்றால் சரிதான். கோவிலுக்குச் செல்லும் ரோட்டை ஒட்டி எதிரியின் நிலம் இருக்கிறது என்றால் சரிதான்.

அன்றைய தினம் ரோட்டை ஒட்டியுள்ள வேர்க்கடலை இருந்த நிலத்திற்கு நாங்கள் நேராக சென்றோம் என்றால் நாங்கள் ஜீப்பை நிறுத்திவிட்டு நடந்து தான் வேர்க்கடலை உள்ள நிலத்திற்குச் சென்றோம். எதிரி எடுத்து ஆஜர் செய்த கொம்பானது சுமார் 1000 செடிகள் இருந்த நிலத்தில் எந்த செடிக்கு அடியிலிருந்து எடுத்து கொடுக்கிறேன் என்று எதிரி சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

கைப்பற்றுதல் மகசரில் காலம் 1-ல் எந்த பகுதியில் உள்ள செடியிலிருந்து குறிப்பிட்டு எந்த இடம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 5வது காலத்தில் முதல் பகுதியில் படிந்துள்ளது என்பதும் இதன் நீளம் சுமார் 64 செ.மீ. என்பதும் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், மை காலியாக இருந்து வேறு பேனாவினால் எழுதப்பட்டிருக்கலாம், எனக்கு சரியாக ஞாபகமில்லை. வேறு வேறு கையெழுத்துக்கள் என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை.

வேர்க்கடலை செடியிடம் எவ்வளவு மணி நேரம் இருந்தோம் என்றால் அரை மணி நேரம் இருந்தோம். அங்கும் போலீசார் வந்ததால் நிறைய நபர்கள் வந்தார்கள் என்றால் அங்கு இரண்டு வீட்டிலிருந்து மட்டும் நபர்கள் வந்தார்கள். அவர்களிடம் காவல் ஆய்வாளர் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் மறுநாள் என்னை போலீசார் அழைத்ததற்கு வட்டாட்சியரிடம் அனுமதி பெற்றேனா என்றால் பெற்றேன்.

பொதுவாக குற்ற சம்பவம் நடந்தால் ட்ரிப்ளிகேட் அறிக்கை தயார் செய்து ஒன்று எங்கள் அலுவலகத்திற்கும், ஒன்று வட்டாட்சியருக்கும், ஒன்று காவல் நிலையத்திற்கும்

அனுப்பி வைக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு ட்ரிப்ளிகேட் அறிக்கை தயார் செய்தேனா என்றால் தயார் செய்யவில்லை, வட்டாட்சியருக்கு மட்டும் அறிக்கை கொடுத்தேன்.

நான் சொல்வது போல் அண்ணா சிலையிடம் செல்லவில்லை என்றாலும், பக்கத்து கட்டிடமான காவல் நிலையத்திற்கு தான் சென்றேன் என்றாலும் சரியல்ல. எங்கள் உயர் அதிகாரிகளிடம் காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க எங்கள் உயர் அதிகாரி சொன்னதின் அடிப்படையில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. மொத்தம் எத்தனை கையொப்பம் போடப்பட்டது என்றால் 2 கையொப்பம் போடப்பட்டுது.

எதிரி நான் சொல்வது போல் தன்னிச்சையாக என் முன்பாக எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தன்னிச்சையாக தான் கொடுத்தார். எதிரி எங்களை அழைத்துச் செல்லவும் இல்லை என்றாலும் தன்னுடைய நிலத்தில் வேர்க்கடலை செடியிலிருந்து எந்தவித கொம்பையும் எடுத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தான் அதில் நான் கையொப்பம் போட்டேன் என்றாலும் சரியல்ல.

எழுதப்படாத வெள்ளை தாள்களில் காவல் ஆய்வாளர் என்னிடமும் கிராம உதவியாளரிடமும் கையொப்பங்கள் பெற்றுக் கொண்டு அதை தான் பின்னிட்டு தயாரித்தார்கள் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எதிரி கையொப்பம் போட்டார் என்று சொல்வது பொய் என்றாலும் பின்னிட்டு எதிரியை மிரட்டப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கில் எத்தனையாவது முறை சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் 2 முறை வந்துள்ளேன், அதற்கு முன்பு 2 முறை வந்தேன். எனக்கு உடல்நிலை சரியில்லாததினால் நான் சாட்சியம் அளிக்க வரவில்லை. காவல் ஆய்வாளர்

என்னை இவ்வழக்கில் விசாரித்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. காவல் துறையினர் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஆவணஙகளை என்னிடம் காட்டி படிக்க சொல்லி அதன் பின்னிட்டு தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் போலீசார் சொல்லி கொடுத்து நான் அண்ணா சிலையிடம் வைத்து கையொப்பம் போட்டேன் என்றும் எதிரியின் நிலத்தில் வைத்து கையொப்பம் போட்டேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் காவல் துறையினருக்கு ஒத்துழைப்பு கொடுப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் ஆய்வாளர் விசாரணைக்காக அண்ணா சிலையிடம் சென்ற போது முன்நாள் நடந்த சம்பவத்தை பற்றி விவரங்கள் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional District & Sessions Judge,
Fast Track Court, Arani.